Government pensioners eligible for pre-medical concessions will be supplied with identity cards in the form prescribed in the G.O. at Government cost for taking treatment in Government medical institutions. என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது முறைப்படி கொடுக்கப்படும்.

மதுராந்தகத்திலுள்ள அரசு மருத்துவமனை

* 559 வினு.—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்று துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லே.

திரு. சி. ஆறுமுகம் : தலேவரவர்களே, தேசிய நெடுஞ்சாலேயில் உள்ள மதுராந்தகத்தில் உள்ள மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிலேயம் இல்லாததால்—அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அதனுல் பல பேர் உயிர் இழக்கும் நிலே ஏற்படுகிறது—அங்கே ஒரு அறுவை சிகிச்சை நிலேயம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவரவர்களே, அங்கே அப்படியே ஒரு அறுவை சிகிச்சை நிலேயம் ஏற்படுத்தப்பட்டாலும் ஸ்பெஷலிஸ்ட் சிகிச்சை மதுராந்தகத்தில் வழங்க இயலாது. அதற்காக வேண்டிய எல்லாவிதமான வசதிகளும் மதுராந்தகத் திற்குப் பக்கத்திலுள்ள செங்கல்பட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விபத்து வராமல் தடுப்பதற்கு அந்தத் துறையில் உள்ளவர்கள், அந்த ஊரில் உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படி விபத்து ஏற்பட்டாலும் நண்பர் ஆறுமுகம் போன்றவர்கள் செங்கல் பட்டுக்கு அவர்களே அழைத்துக்கொண்டு போய் எல்லா விதமான ஏற்பாடுகளேயும் செய்ய வேண்டும்.

Working Women's Hostels.

* 560 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Working Women's Hostels in the State

(*b*) the places where they are located; and

(*c*) the total number of inmates in these Hostels?

1973 மார்ச் 29]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 26 விடுதிகள்.

(இ) செங்கல்பட்டு மேற்கு, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை நகர், தஞ்சாவூர் கிழக்கு, மேற்கு, கன்னியாகுமரி. சென்னை மாநகர்.

(உ) 1,461 பேர்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, தொழில் துறைகளிலே ஈடுபட்டு சென்னையிலே இருக்கின்ற பெண்களுக்காக நடத்தப்படும் பிரைவேட் ஹாஸ்டலுக்குக் கொடுக்கப்படும் கிராண்ட் எவ்வளவு? கட்டிடத்திற்கு எவ்வளவு grant கொடுக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் மற்றவைகளுக்கான தொகையை ஹாஸ்டல் நடத்துபவர்கள் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னால் எந்த மாதிரிக் கட்டடம் கட்டப்போகிறார்கள் என்று டிசைன் போட்டு அனுப்பினால் அதைப் பரிசிலித்து 35,000 ரூபாய் மாச்சிங் கிராண்ட் மாத்திரம் கொடுக்கிறோம்.

திரு. தொ. ப. சினிவாசன் : மகளிர் இல்லம் ஒன்றை வடாற்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரிலே அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

Report of Raj Committee.

*561 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the State Government have received a copy of the Raj Committee Report ; and

(b) if so, whether it has been examined?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் உள்ள எந்தெந்த திட்டங்களை ஏற்றுக்கொள்வது, எந்தெந்த திட்டங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்ற கருத்தை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரத்தை அமைச்சரவர்கள் அளிப்பார்களா?